# மலேசிய முத்தமிழ்ச் சங்கம்
PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA

பதிவு எண் / No. Pendaftaran: PPM-018-14-12042023

## இலச்சினை விளக்கம்:

தமிழர்களின் அடையாளமாக திகழும் மொழி இலக்கிய வடிவமான நூல் பிரதானமாகவும், வாழ்க்கைத் தத்துவத்தை 7 அடிகளிலான 1330 குறள்களைக் கொண்ட பொதுமறையான திருக்குறளை வழங்கிய ஐயன் திருவள்ளுவரின் உருவத்தையும், போதனைகளையும் கருப்பொருளாகக் கொண்டு, இயல் இசை நாடகம் என்ற முத்தமிழின் மூலங்களை அடிப்படையாகக் கொண்டு வட்ட வடிவில், உலக பொருளாதாரம், புத்தாக்கம் போன்ற துறைகளில் முன்னேறும் தேடல்களோடு, சமுதாய உருமாற்ற நிலைகளை நோக்கிய பயணங்களை ஒருங்கிணைக்கும் வடிவமாக அமைகிறது.

## தொலையிலக்கு:

ஒற்றுமையான, மதிப்பும் மாண்பும், ஆற்றலும், பொருளாதார ஏற்றமும் நிறைந்த தமிழ் சமுதாயத்தை உருவாக்குதல்

## குறியிலக்கு:

மொழி, இலக்கிய, கலை கலாச்சார பண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, அறிவியல், விஞ்ஞானம், தொழில்நுட்பம், கணினித்துறை, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு சார்ந்த புத்தாக்க அறிவுத்திறனை வளர்த்துக்கொண்டு, பொருளாதாரத்தில் உயரும் வழிமுறைகளை அடையாளம் கண்டு சமுதாயத்திடம் கொண்டு சேர்த்தல்



**மலேசிய முத்தமிழ்ச் சங்கம்**
PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA
பதிவு எண் / No. Pendaftaran: PPM-018-14-12042023
2-5-2, Block B, 5th Floor, Jalan Semarak Api 2, Diamond Square, Off Jalan Gombak,
53000 Setapak, W.P. Kuala Lumpur, Malaysia.
Tel: 03-4022 0800  Fax: 03-4022 9800  Email: muthamizhsangam2023@gmail.com

## தேசிய தலைவர்
## மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து
## அவர்களின் உரை

முத்தமிழ்ச் சங்க அனைத்து உறுப்பினர்களுக்கும் வணக்கம்.
நமது சங்கத்தின் முதலாவது ஆண்டுக்கூட்டத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். நமது சங்கம் கடந்த ஆண்டு பதிவு பெற்றது. இந்த குறுகிய ஓராண்டு காலத்தில் சில முக்கிய நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளோம்.

அயலக தமிழர் மாநாடு, தீபாவளி விருந்து நிகழ்ச்சி, நூல் வெளியீடு போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தோம். இதில், குறிப்பாக சென்னையில் அயலக தமிழர் மாநாட்டில் கலந்துகொண்டது மிக முக்கியமான தமிழ்ச்சங்கங்களின் சந்திப்பாகவும் அனுபவமிக்க ஒரு முக்கிய நிகழ்ச்சியாகவும் அமைந்தது.

உலகின் மற்ற சங்கங்களின் பேராளர்களை சந்திக்கவும் அவர்களோடு கருத்துகள் பரிமாறவும் வாய்ப்பு கிடைத்தது. சங்கப்பேராளர்களுடன் இந்த ஒரு வார கால சென்னைப்பயணம் மிகவும் மகிழ்ச்சியாகவும் மறக்க முடியாத நிகழ்ச்சியா–கவும் அமைந்துள்ளது.

நமது சங்க வளர்ச்சிக்காக தீபாவளி விருந்து நிகழ்ச்சியில் நமது ஒன்றுபட்ட ஒருங்கிணைப்புப்பணி நிகழ்ச்சி வெற்றிகரமாக முடிய உதவியது. நமது சங்கத்தின் இலக்கு, குறிக்கோள் நோக்கங்கள் யாவும் செம்மையாக வரையப்பட்டுள்ளதால், நாம் மொழி கலை கலாச்சாரம் பண்பாடு என்பதுடன் விஞ்ஞானம், கணிதம், அறிவியல், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளிலும் நாம் ஈடுபட்டு வளரவும், சங்க உறுப்பினர்களுக்கு உதவிடவும் தயாராக இருக்க வேண்டும்.

மாறிவருகின்ற உலகமயம் இப்போது செயற்கை நுண்ணறிவினை அதிகமாக சார்ந்துள்ளது. இதற்காக இத்துறையில் அனுபவமிக்க நிபுணர்களை இணைத்துக்கொண்டு ஒரு நிபுணத்துவக்குழுவை உருவாக்கவிருக்கிறது.

நமது சங்கத்தை உயர்த்த நாம் வகுத்துள்ள இலக்கு நோக்கிப் பயணிக்க அனைவரும் ஓரணியில் திரளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்புடன்,

**மனோகரன் மாரிமுத்து**
தேசியத் தலைவர்
மலேசிய முத்தமிழ்ச்சங்கம்

மலேசிய முத்தமிழ்ச் சங்கம்
PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA
பதிவு எண் / No. Pendaftaran: PPM-018-14-12042023
2-5-2, Block B, 5th Floor, Jalan Semarak Api 2, Diamond Square, Off Jalan Gombak,
53000 Setapak, W.P. Kuala Lumpur, Malaysia.
Tel: 03-4022 0800 Fax: 03-4022 9800 Email: muthamizhsangam2023@gmail.com

13.3.2024

மலேசிய முத்தமிழ்ச் சங்க உறுப்பினர்களுக்கு, வணக்கம்.

**கரு : முதலாம் ஆண்டுக்கூட்டம் '2024**

மலேசிய முத்தமிழ்ச் சங்கத்தின் முதலாவது (1) ஆண்டுக்கூட்டம் கீழ்க்கண்ட வகையில் நடைபெறும் என்பதை மகிழ்ச்சயுடன் தெரிவித்துக் கொள்கிறோம். தாங்கள் கலந்து சிறப்பிக்க அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்.

தேதி : 28.3.2024 ( வியாழக்கிழமை)
நேரம் : காலை 9.30 மணிக்கு
இடம் : டான் ஸ்ரீ கே.ஆர்.சோமா மண்டபம்,
விஸ்மா துன் சம்பந்தன், கோலாலம்பூர்

**கூட்ட நிரல்**

1. வரவேற்புரை (செயலாளர்)
2. தலைமையுரை (தேசியத்தலைவர்)
3. 2023 - 2024 ஆண்டறிக்கை சமர்ப்பித்தல்
4. 2023 ஆம் ஆண்டுக்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தல
5. 2024 - 2025 ஆண்டுக்கான செயல் திட்டங்கள்
6. பொது
7. நன்றியுரை

இவ்வண்ணம்,

பன்னீர்செல்வம் கருப்பையா, ANS,PMC,PJK
செயலாளர்
மலேசிய முத்தமிழ்ச்சங்கம்

மலேசிய முத்தமிழ்ச் சங்கம்
PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA
(PPM-018-14-12042023)
K. PANNEERSELVAM ANS, PMC, PJK
*Hon. Secretary*

PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA
மலேசிய முத்தமிழ்ச் சங்கம்
(PPM-018-14-12042023)



**மலேசிய முத்தமிழ்ச் சங்கம்**
**PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA**
பதிவு எண் / No. Pendaftaran: PPM-018-14-12042023
2-5-2, Block B, 5th Floor, Jalan Semarak Api 2, Diamond Square, Off Jalan Gombak,
53000 Setapak, W.P. Kuala Lumpur, Malaysia.
Tel: 03-4022 0800 Fax: 03-4022 9800 Email: muthamizhsangam2023@gmail.com

## செயலாளர்
## திரு. பன்னீர்செல்வம் கருப்பையா
## அவர்களின் அறிக்கை

அனைத்து முத்தமிழ்ச்சங்க உறுப்பினர்களுக்கும் வணக்கம்.
சங்கத்தின் முதலாவது ஆண்டுக்கூட்டத்தில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

முத்தமிழ் என்பது இயல் இசை நாடகம், கலை கலாச்சார பண்பாடுகளை முழுமையாகக் கொண்டது. அதன் அடிப்படையில், தமிழ் சார்ந்த தமிழர் சார்ந்த மேம்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கும் முக்கியப் பணியில் நாம் நம்மை இணைத்துக்கொண்டுள்ளோம் என்பதில் நாம் பெருமைக்கொள்ள வேண்டும்.

நம்மோடு தமிழ்ப்பணி ஆற்ற இன்னும் ஏராளமான உறுப்பினர்களை சேர்க்கும் முயற்சியில் நமது உறவுகள் ஈடுபட வேண்டும். ஒரு சக்திமிக்க சங்கத்தை உருவாக்கி செயலாற்றிட நாம் அடித்தளம் அமைக்க வேண்டும்.

நமது சங்கத்தின் முதலீட்டு வாகனமாக ‘சங்கம் மேம்பாட்டு கூட்டுறவுக் கழகத்தை அமைத்துள்ளோம். நாட்டில் விவசாயம், வேளாண்மைத் திட்டங்களில் ஈடுபடவும், மலேசிய தொழில் முனைவோர், கூட்டுறவு அமைச்சின் திட்டங்களிலும் பங்கேற்கவும் இந்த கழகம் பாலமாக அமையும்.

மொழி இலக்கியம், கலை கலாச்சாரத்தோடு, இன்றைய உலகைக் கட்டியாளும், கணிணி, தொழில்நுட்பமும் செயற்கை நுண்ணறிவும் நம்மை வளர்ச்சிப்பாதையில் செம்மைப்படுத்தும் முக்கிய கருவிகளாகும்.

ஆகவே, நமது மேம்பாடுகளுக்கான வாய்ப்பு வசதிகளை கண்டறிந்து காலத்திற்கேற்ப செயல்படும் திறன்களை வளர்த்துக்கொள்ளவேண்டும். எல்லையற்ற உலகமயமாதலின் காரணமாக நொடிப்பொழுதில் தகவல் பரிமாற்றங்களின் சாத்தியங்களால் நாம் நமது வியூகங்களையும் அறிவாற்றல்களையும் ஒருங்கிணைத்து வெற்றி பெறும் வழி வகைகளை தேடி வளர்வதுடன் நமது உறவுகளையும் வளர்க்க உதவிடுவோம்.
நன்றி, வணக்கம்

அன்புடன்,

**பன்னீர்செல்வம் கருப்பையா** ANS,PMC,PJK
செயலாளர்
மலேசிய முத்தமிழ்ச்சங்கம்

# மலேசிய முத்தமிழ்ச் சங்க செயலவை உறுப்பினர்கள்


மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து
**தேசிய தலைவர்**


திரு. ஞானசேகரன் சின்னதுரை
**தேசிய துணைத் தலைவர்**


திரு. பன்னீர்செல்வம் கருப்பையா
**செயலாளர்**


திருமதி மரினா தேவி சண்முகம்
**துணைச் செயலாளர்**


திரு. சந்திரலிங்கம் சமிந்து
**பொருளாளர்**


திரு. பாஸ்கரன் சோலையழகு
**தகவல் பிரிவு அதிகாரி**


திரு. இராமசாமி பொன்னுசாமி
**செயலவை உறுப்பினர்**


திருமதி கீதா பாரதிதாசன்
**செயலவை உறுப்பினர்**


திரு. கருப்பையா ஆறுமுகம்
**செயலவை உறுப்பினர்**


குமாரி நாகேஸ்வரி குணசேகரன்
**செயலவை உறுப்பினர்**


திருமதி கரம்பால் கோர் கிருஷ்ணா சிங்
**செயலவை உறுப்பினர்**


திருமதி ஜெகதீஸ்வரி ஆறுமுகம்
**செயலவை உறுப்பினர் (பேராக்)**


திரு. மோசஸ் லூர்துசாமி
**செயலவை உறுப்பினர் (பஹாங்)**


திரு. நாகேஸ்வரராவ் சூரியநாராயணன்
**செயலவை உறுப்பினர் (பினாங்கு)**


திருமதி விஜி அங்கமுத்து
**செயலவை உறுப்பினர் (மலாக்கா)**

## மலேசிய முத்தமிழ்ச் சங்க செயலவை உறுப்பினர்கள்

| | |
|---|---|
| தேசிய தலைவர் | : மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து |
| தேசிய துணைத் தலைவர் | : திரு. ஞானசேகரன் சின்னதுரை |
| செயலாளர் | : திரு. பன்னீர்செல்வம் கருப்பையா |
| துணைச் செயலாளர் | : திருமதி மரினா தேவி சண்முகம் |
| பொருளாளர் | : திரு. சந்திரலிங்கம் சமிந்து |
| தகவல் பிரிவு அதிகாரி | : திரு. பாஸ்கரன் சோலையழகு |
| செயலவை உறுப்பினர்கள் | : திரு. இராமசாமி பொன்னுசாமி |
| | : திரு. கருப்பையா ஆறுமுகம் |
| | : குமாரி நாகேஸ்வரி குணசேகரன் |
| | : திருமதி கீதா பாரதிதாசன் |
| | : திருமதி கரம்பால் கோர் கிருஷ்ணா சிங் |
| | : திரு. நாகேஸ்வரராவ் சூரியநாராயணன் |
| | : திருமதி ஜெகதீஸ்வரி ஆறுமுகம் |
| | : திருமதி விஜி அங்கமுத்து |
| | : திரு. மோசஸ் லூர்துசாமி |

## மலேசிய முத்தமிழ்ச் சங்க மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

| | |
|---|---|
| கூட்டரசு பிரதேசம் | : மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து |
| நெகிரி செம்பிலான் | : திரு. ஞானசேகரன் சின்னதுரை |
| சிலாங்கூர் | : திரு. பன்னீர்செல்வம் கருப்பையா |
| பிளாங்கு | : திரு. நாகேஸ்வரராவ் சூரியநாராயணன் |
| பேராக் | : திருமதி ஜெகதீஸ்வரி ஆறுமுகம் |
| மலாக்கா | : திருமதி விஜி அங்கமுத்து |
| பஹாங் | : திரு. மோசஸ் லூர்துசாமி |

# மலேசிய முத்தமிழ்ச் சங்கத்தின் செயலாக்கப் பிரிவுகள்

**பொருளாதாரம்/நிதி/அரசியல் தொடர்புகள்/புத்தாக்கம்**

மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து

திரு. சந்திரலிங்கம் சமிந்து

**தமிழ்ப்பள்ளிகள்/கல்வி/விளையாட்டுத்துறை**

திரு. எட்வர்ட் ஞானசேகரன்

திருமதி. மரினா தேவி சண்முகம்

**கலை கலாச்சாரம் / மொழி இலக்கியம்**

திரு. கரு. பன்னீர்செல்வம்

திரு. பாஸ்கரன் சோலையழகு

திரு. காந்திதாசன் துரைசாமி

குமாரி. நாகேஸ்வரி குணசேகரன்

**சிறு தொழில்/வர்த்தகம்/தொழில் முனைவோர்**

திரு. எட்வர்ட் ஞானசேகரன்

திரு. ராமசாமி பொன்னுசாமி

**அனைத்துலக தொடர்புகள்**

மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து

திரு. கரு. பன்னீர்செல்வம்

திரு. எட்வர்ட் ஞானசேகரன்

**சமூக ஊடகங்கள்**

குமாரி மித்ரா முருகையா

குமாரி நாகேஸ்வரி குணசேகரன்

திருமதி மரினாதேவி சண்முகம்





# மலேசிய முத்தமிழ்ச்சங்க அமைப்புக்கூட்டக் குறிப்பு

**மலேசிய முத்தமிழ்ச் சங்கத்தின் அமைப்புக்கூட்டம்.**

மலேசிய முத்தமிழ்ச்சங்கம் (பதிவு எண் PPM–018–14–12042023) கடந்த 12.4.2024 அன்று, மலேசிய பதிவகத்தால் அங்கீகரிக்கப்பட்டது. சங்கத்தின் அமைப்புக்கூட்டம் 19.04.2024, அன்று புதன் கிழமை , கோலாலம்பூர் மெட்ராஸ் கபே உணவக மண்டபத்தில் மாலை 5.00 மணிக்கு நடைபெற்றது. பதிவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளவாறு, கீழ்க்கண்ட பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர்.



| | | |
|---|---|---|
| 1. தலைவர் | : | மதிப்புமிகு மனோகரன் மாரிமுத்து |
| 2. துணைத்தலைவர் | : | திரு. ஞானசேகரன் சின்னதுரை |
| 3. செயலாளர் | : | திரு. பன்னீர்செல்வம் கருப்பையா |
| 4. துணைச்செயலாளர் | : | திருமதி மரினா தேவி சண்முகம் |
| 5. பொருளாளர் | : | திரு. சந்திரலிங்கம் சமிந்து |
| 6. தகவல் பிரிவுக்தலைவர் | : | திரு. பாஸ்கரன் சோலையழகு |
| 7. இளையோர் பிரிவு | : | குமாரி மித்ரா முருகையா |

செயலவை உறுப்பினர்கள்:

| | |
|---|---|
| 1. திரு. இராமசாமி பொன்னுசாமி | – சிலாங்கூர் |
| 2. திரு. கருப்பையா ஆறுமுகம் | – சிலாங்கூர் |
| 3. திருமதி கரம்பால் கோர் கிருஷ்ணா சிங் | – சிலாங்கூர் |
| 4. திருமதி கீதா பாரதிதாசன் | – சிலாங்கூர் |
| 5. குமாரி நாகேஸ்வரி குணசேகரன் | – கூட்டரசுப் பிரதேசம் |
| 6. குமாரி கிறிஸ்தினா லூர்ட்ஸ் | – பகாங் |
| 7. திரு. நாகேஸ்வர ராவ் சூரியநாராயணன் | – பினாங்கு |
| 8. திருமதி ஜெகதீஸ்வரி ஆறுமுகம் | – பேராக் |
| 9. திரு. மதியழகன் எல்லோ | – மலாக்கா |

**1.0 வரவேற்புரை**

1.1 மலேசிய முத்தமிழ்ச்சங்கத்தின் செயலாளராக நியமனம் பெற்ற திரு. பன்னீர்செல்வம் கருப்பையா சங்கத்தின் பொறுப்பாளர்களையும் செயலவை உறுப்பினர்களையும் வணக்கம் கூறி வரவேற்றார். சங்கம் பதிவு குறித்து மகிழ்ச்சி தெரிவித்து, சங்கம் அமைக்கப்பட்டதன் நோக்கம், இலக்கு, குறிக்கோள், சங்கத்தின் இலச்சனை (LOGO) குறித்தும் விளக்கினார். (சங்கத்தின் நோக்கம், இலக்கு, குறிக்கோள் இணைக்கப்படுள்ளது)

1.2 சங்கம் மொழி, இலக்கியம் கலை கலாச்சார பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, தொழில் நுட்பம், கணிணி, விஞ்ஞானம், அறிவியல், புத்தாக்கம் சார்ந்த பொருளாதாரம், வர்த்தகம் ஆகிய துறைகளில் முன்னேற வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ளத் தயாராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார்.



**2.0 தலைமையுரை :**

2.1 சங்கத்தின் தேசியத் தலைவர் சங்கம் அதிகாரப்பூர்வமான அமைப்பு என்பதால் நாம் சிறப்பாகவும் அரசாங்க உதவிகளுடன் சமூகம் சார்ந்த நிகழ்ச்சிகளை மேற்கொள்ள முடியும் என்றார்.

2.2 சங்கம் கலை கலாச்சாரம், மொழி இலக்கியத்தோடு, கணிதம், விஞ்ஞானம் சார்ந்த பட்டதாரிகளை உருவாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார்.

2.3 இதற்காக கணித மேதை இராமானுஜர் உயர்க் கல்விக்கூடம் அமைக்கும் முயற்சியினை சங்கம் மேற்கொள்ளும்.

2.4 சங்கத்திற்குத் தற்சமயம் கிளைகள் இல்லை. நேரடி உறுப்பியங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2.5 சங்கத்தின் முதலாவது முக்கியத் திட்டமாக, நிதி சேர்க்கும் தீபாவளி விருந்து நிகழ்ச்சி நடைபெற ஆவன செய்யப்படும்.

**3.0 உத்தேசப் பிரிவுகள்**

3.1 கல்வி / சரித்திரம் / விளையாட்டு

3.2 மொழி இலக்கியம்

3.3 கலை கலாச்சாரம்

3.3 வர்த்தகம் / தொழில் முனைவோர்

3.4 அறிவியல்/ விஞ்ஞானம் / புத்தாக்கம் / நவீன கண்டுபிடிப்புகள்

4.3. சிலாங்கூர் : திரு. பன்னீர்செல்வம் கருப்பையா

4.4. மலாக்கா : திரு. சந்திரலிங்கம் சமிந்து (ஒருங்கிணைப்பாளர்)

4.5 மற்ற மாநிலப்பொறுப்பாளர்கள் அவர்களது, பின்புலம், திறன், தொடர்புகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு நியமிக்கப்படுவர்.

**5.0 உறுப்பியம்**

5.1 சங்கம் தற்சமயம் கிளைகள் அமைக்க எண்ணம் கொண்டிருக்கவில்லை. ஆனால் மாநிலம் வாயிலாகவும் நேரடியாகவும் உறுப்பியம் பெறுவதற்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.

**6. பொது**

6.1 திரு. பொ. இராமசாமி / திரு ஆ. கருப்பையா : சங்கம் அமைக்கப்பட்டதில் மகிழ்ச்சி அடைவதாகவும், அனைவரும் இணைந்து பணியாற்றும் வாய்ப்புக்கு நன்றி. சங்கத்தின் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்குவதாகவும் தெரிவித்தனர்.

6.2 திரு. ச.ஞானசேகரன் : சங்கத்தில் பிரிவுகள் அமைத்து, அதற்கு தகுதியானவர்களை தேர்வு செய்வதன் மூலம் சங்கம் சிறப்பாக செயல்பட முடியும்.

6.3 திருமதி மரினா : தமிழ்ப்பள்ளிகளில் STEM - TVET துறைகளில் சங்கம் ஈடுபட முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

6.4 திரு. சோலை பாஸ்கரன் : சங்கம் அமைக்கப்பட்ட ஏப்ரல் மாதத்தை நினைவுகூரும் வகையில் ஆண்டு தோறும் 'முத்தமிழ் விழா' நடத்த வேண்டும்.
6.5 குமாரி மித்ரா : சங்கத்தில் இளையோர் அதிகமாக சேர ஊக்குவிக்க வேண்டும்.
6.6 சங்கத்தின் அடுத்தக்கூட்டம் 10.05.2023 (புதன் கிழமை) நடைபெறும்

**7. நன்றியுரை**
7.1 சங்கம் உலகின் மற்ற தமிழ்ச்சங்கங்களுடன் இணைந்து அனைத்துலக நிலையில் பணியாற்ற வேண்டும். அடுத்த ஆண்டு சென்னையில் நடைபெறும் அயலக தமிழர் விழாவில் சங்கம் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொண்டு சங்கத்தின் செயலாளர் திரு. பன்னீர்செல்வம் கருப்பையா
கூட்டத்தை இரவு 7.45 மணிக்கு நிறைவு செய்தார்.

தொகுப்பு
**பன்னீர்செல்வம் கருப்பையா**
செயலாளர்



PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA

# 2023 ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டறிக்கை.

மலேசிய முத்தமிழ்ச்சங்கம் கடந்த ஆண்டு ஏப்ரல் திங்கள் 12ஆம் நாள், மலேசிய சங்கப்பதிவகத்தால் அதிகாரப்பூர்வமாக அனுமதி வழங்கி அங்கீகரிக்கப்பட்டது. சங்கத்தின் முதல் அமைப்புக் கூட்டமும் முதலாவது செயலவைக்கூட்டமும் கடந்த 19.4.2023ஆம் நடைபெற்றது. அந்தக்கூட்டத்தில் சங்கம் மேற்கொள்ளவிருக்கும் திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடல் நடத்தப்பட்டு, கீழ்க்கண்ட செயல் திட்டங்கள் அமலாக்கம் காண பரிசீலிக்கப்பட்டது.

1. தமிழ்ப்பள்ளிகளுக்கு நூல் வழங்குதல்
2. சங்கத்திற்கு நிதி சேர்க்கும் விருந்து நிகழ்ச்சி
3. சென்னையில் நடைபெறும் அயலக தமிழர் தினவிழாவில் பங்கேற்பு
4. உள்நாட்டு சரித்திரச்சுற்றுலா
5. சங்கத்திற்கு ஒரு கூட்டுறவுக் கழகத்தை அமைத்தல்
6. மொழி இலக்கியம் கலை கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்துதல்
7. உள்நாட்டு கலைஞர்கள், இலக்கியவாதிகளுக்கு விருதுகள் வழங்குதல்

**1. தமிழ்ப்பள்ளிகளுக்கு நூல் வழங்குதல்**

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத்தின் ஆதரவுடன் மலேசிய முத்தமிழ்ச் சங்கம் நாட்டில் உள்ள ஏராளமான தமிழ்ப்பள்ளிகளுக்கு நூல்கள் வழங்கியுள்ளது. குறிப்பாக நெகிரி செம்பிலான் மாநிலத்தில், சங்கத்தின் துணைத்தலைவர் திரு. ஞானசேகரன் சின்னதுரை அவர்களும் சிலாங்கூர் மாநிலத்தில் பொருளாளர் திரு. சந்திரலிங்கம் சமிந்து அவர்களும் இந்தப்பணியினை மிகச்சிறப்பாக மேற்கொண்டனர். தமிழ்ப்பள்ளி மாணவர்கள் வாசிப்பில் சிறந்து விளங்கவேண்டும் என்பதுடன் பொது அறிவு, மொழிவளத்தை வளர்த்துக்கொள்ளவும் இந்த நூல்கள் பயன் பெறும் என்ற நோக்கத்தில் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| **1. நெகிரிசெம்பிலான் மாநில தமிழ்ப்பள்ளிகள்** | | | |
|---|---|---|---|
| **எண்** | **பள்ளிகள்** | **எண்** | **பள்ளிகள்** |
| 1 | SJKT ஜாவா லேன் | 13 | SJKT லாடாங் லின்சம் |
| 2 | SJKT லோபாக் | 14 | SJKT லாடாங் செண்டயான் |
| 3 | SJKT சிரம்பான் | 15 | SJKT லாடாங் சுங்கை சாலாக் |
| 4 | SJKT கான்வெண்ட | 16 | SJKT போர்ட் டிக்சன் |
| 5 | SJKT லாடாங் சிரம்பான் | 17 | SJKT லாடாங் தானா மேரா |
| 6 | SJKT லாடாங் செனவாங் | 18 | SJKT முகுந்தன் |
| 7 | SJKT லாடாங் சாகா | 19 | SJKT நீலாய் |
| 8 | SJKT லாடாங் அதர்ட்டன் | 20 | SJKT கெய்ரோ |
| 9 | SJKT லாடாங் சிலியாவ் | 21 | SJKT துன் சம்பந்தன் |
| 10 | SJKT ரந்தாவ் | 22 | SJKT லாடாங் லெங்கேங் |
| 11 | SJKT பண்டார் ஸ்பிரிங் ஹில் | 23 | SJKT பண்டார் ஸ்ரீ செண்டயான் |
| 12 | SJKT பட்து அம்பார் | | |

| **2. சிலாங்கூர்** | | | |
|---|---|---|---|
| **எண்** | **பள்ளிகள்** | **எண்** | **பள்ளிகள்** |
| 1 | SJKT தாமான் பிஜே எஸ் | 5 | SJKT ரிஞ்சிங் |
| 2 | SJKT பெர்மாத்தா | 6 | SJKT செமினி |
| 3 | SJKT சிப்பாங் | 7 | SJKT சாலாக் திங்கி |
| 4 | SJKT வெஸ்ட் கன்றி | | |

























| **3. மலாக்கா** | | **4. பேராக்** | |
|---|---|---|---|
| **எண்** | **பள்ளிகள்** | **எண்** | **பள்ளிகள்** |
| 1 | SJKT புக்கிட் காஜாங் | | 1 SJKT சிலிம் ரிவர் |
| 2 | SJKT பண்டார் மலாக்கா | | 2 SJKT புந்தோங் |

| | **5. பகாங்** | | **6. பினாங்கு** |
|---|---|---|---|
| **எண்** | **பள்ளி** | **எண்** | **பள்ளி** |
| 1 | SJKT சுங்கை கவாங், மெந்தகாப் | | 1 SJKT மாக் மாண்டின் |

## 2. தீபாவளி விருந்து நிகழ்ச்சி

சங்கத்திற்கு நிதி சேர்க்கும் வகையில் கடந்த 28.10.2023 அன்று, சனிக்கிழமை கோலாலம்பூர் பிரிக்பீல்ட்ஸ் பேங்க் ராக்யாட் அரங்கத்தில் மாபெரும் கலை நிகழ்ச்சியுடன் கூடிய தீபாவளி விருந்து விழா நடைபெற்றது.

இந்த விருந்திற்கு பிரதமரை சிறப்பு விருந்தினராக அழைக்க, பிரதமரின் இந்தியப் பிரதிநிதி திரு சண்முகம் அவர்களையும் நாடாளுமன்றத்தில் பிரதமரையும் சந்தித்து அழைப்பு வழங்கப்பட்டது.


திரு. சண்முகத்துடன் செயலவையினர்



நாடாளுமன்றத்தில் சங்க பொறுப்பாளர்கள்

இந்த விருந்து நிகழ்ச்சிக்காக சங்க செயலவை உறுப்பினர்கள் 6 மாத காலமாக உழைத்து வெற்றிக்கு பாடுபட்டனர். 100 மேஜைகள் தலா 1,000 ரிங்கிட்டில் விற்கப்பட்டது. இந்த விருந்தில் மனித வள அமைச்சர் மாண்புமிகு சிவகுமார் அவர்களும் தேசிய நில நிதி கூட்டுறவு சங்க நிர்வாக இயக்குநரும் சங்கத்தின் புரவலருமான டத்தோ பா.சகாதேவன் அவர்களும், தமிழ்நாடு சென்னையில் இருந்து உலகத் தமிழ்ச் சங்கத் தலைவரும் சென்னைத் தமிழ்ச்சங்கத் தலைவருமாகிய டாக்டர் இளங்கோவன் அவர்களும் இந்த சங்கங்களின் அனைத்துலக இயக்குநர் திரு. ஐயப்பன் அவர்களும் முன்னாள் அமைச்சர் டான் ஸ்ரீ கேவியஸ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.


செயலாளர் கரு. பன்னீர்செல்வம்


தலைவர் திரு. மனோகரன்


மாண்புமிகு சிவகுமார்

அழைக்கப்பட்ட சிறப்பு பிமுகர்களும் தமிழ் அமைப்புக்களை சார்ந்த பொறுப்பாளர்களும் பொது மக்களுமாக ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். உள்ளூர் கலைஞர்களின் இசை நிகழ்ச்சியும் சிறப்பு உரைகளும் இடம் பெற்றன.

மாண்புமிகு அமைச்சர் சிவகுமார் அவர்கள் சங்கம் சிறப்பாக செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, அதன் செயல் திட்டங்களுக்காக, சங்கத்திற்கு 50,000 ரிங்கிட் வழங்குவதாக அறிவித்தார்.



*சங்கத்தின் செயலவையினரும், சிறப்பு பிரமுகர்களும்*

**விருந்து குறித்த பத்திரிகைச் சந்திப்பு**




சங்கத்தின் தீபாவளி விருந்து குறித்த பத்திரிகைச் சந்திப்பு 20.10.23 அன்று நடைபெற்றது. இதில் மலேசிய நண்பன், தமிழ் மலர், மக்கள் ஓசை நாளிதழ்களைச் சேர்ந்த நிருபர்கள் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் சங்கம் அமைக்கப்பட்டதன் முக்கிய நோக்கங்கள், இலக்கு, குறிக்கோள் போன்றவை விளக்கப்பட்டன.

மேலும் விருந்து குறித்து, ஒரு மேஜை ஆயிரம் ரிங்கிட்டில், 100 மேஜைகள் அடங்கிய நிதி சேர்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்றும் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த மேஜை விற்பனைத் திட்டத்தில் சங்கத்தைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்களும் ஈடுபட்டுள்ளனர் என்றும் இந்த நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற அனைவரது ஆதரவும் ஒத்துழைப்பும் தேவை என்று சந்திப்புக்கூட்டத்தை ஏற்பாடு செய்து, ஒருங்கிணைத்த சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

இந்த விருந்திற்கு மாண்புமிகு அமைச்சர் சிவகுமார் அவர்களும் துணை அமைச்சர் திருமதி சரஸ்வதி அவர்களும் உலகத்தமிழ்ச் சங்கத்தலைவரும் சென்னைத் தமிழ்ச்சங்கத்தின் தலைவருமாகிய டாக்டர் இளங்கோவன் அவர்களும் சங்கத்தின் அனைத்துலக தொடர்பு இயக்குநர் திரு. ஐயப்பன் அவர்களும் கலந்து கொள்ளவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.



*உலகத் தமிழ்ச்சங்கத் தலைவருடன் சங்க உறுப்பினர்கள்*



மக்கள் ஓசை Makkal Osai

50,000 ரிங்கிட் மானியம்

**பத்திரிகைச்செய்தி**



செயலவையினர்

### 3. சங்கத்திற்கு கூட்டுறவுக் கழகம் அமைப்புக்கூட்டம்

சங்கம், விவசாயம், வேளாண்மை துறையில் ஈடுபடும் இலக்கிலும், நாட்டின் தொழில் முனைவோர், கூட்டுறவு அமைச்சுடன் இணைந்து கூட்டுறவுத் திட்டங்களில் ஈடுபடுவதற்கும் சங்கம் மேம்பாட்டு கூட்டுறவு கழகம் ஒன்றை அமைக்க செயலவைக் கூட்டத்தில் கலந்தாலோசிக்கப்பட்டு, மலேசிய கூட்டுறவு ஆணை–யத்திறகு விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டது.




கூட்டுறவு ஆணைய அதிகாரியுடன் சந்திப்பு

நமது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன் தொடர்பில் கூட்டுறவு ஆணையத்தின் வேண்டு கோளுக்கிணங்க, 21.9.2023 அன்று, முதல் அமைப்புக்கூட்டம் டான் ஸ்ரீ கே.ஆர்.சோமா மண்டபத்தில் நடை–பெற்றது. அமைப்புத் தலைவராக திரு. மனோகரன் மாரிமுத்துவும் அமைப்புச் செயலாளராக திரு. பன்னீர்செல்வமும் துணைத்தலைவராக திரு. ஞானசேகரனும் நியமிக்கப்பட்டு, அமைப்பு பொறுப்பாளர்களாக இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டது.




சங்கத்தின் உறுப்பினர்கள் கூட்டுறவு கழகத்தின் பண்பாட்டு நெறிகளையும் கூட்டுறவு மூலம் ஏற்படும் நன்மைகளை அறிமுகப்படுத்தும் நோக்கிலும் இந்த கழகம் அமைக்கப்படுகிறது. இது 'சங்கம் மேம்பாட்டு கூட்டுறவுக் கழகம்' என்று அமைக்கப்படும்.









கூட்டுறவு அமைப்புக்கூட்டத்தில்

கூட்டுறவு அமைப்பு விளக்கம் வழங்கப்படுகிறது

### 4. அயலக தமிழர் மாநாடு

கடந்த 11 / 12 .1.2024 ஆகிய நாட்களில் சென்னையில் அயலக தமிழர் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மலேசிய நாட்டைப் பிரதிநிதித்து ஏறக்குறைய 100க்கும் மேற்பட்ட பேராளர்கள் கலந்து கொண்டனர். மலேசிய முத்தமிழ்ச்சங்கத்தைப் பிரதிநிதித்து 12 பேராளர்கள் கலந்துகொண்டனர். ஏறக்குறைய 60 நாடுகளில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப்பேராளர்கள் கலந்து கொண்டனர். மலேசிய முத்தமிழ்ச்சங்க பேராளர்கள் பன்னாட்டு தமிழ் சங்கங்களின் பேராளர்களையும் பொறுப்பாளர்களையும் சந்தித்து தகவல் பரிமாறிக்கொண்டனர். அது மட்டுமன்றி, விரைவில் அந்தமான் தீவில் உலகத்தமிழ்ச்சங்கத்தலைவர் டாக்டர் இளங்கோவன் தலைமை ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் உலகத்தமிழ்ச் சங்கங்களின் சங்கமம் மாநாடு குறித்தும் விளக்கம் வழங்கப்பட்டது.

தமிழ் நாட்டு முதலமைச்சர் மாண்புமிகு ஸ்டாலின் அவர்கள் மாநாட்டை திறந்து வைத்து உரையாற்றினார். உலகத்–தமிழர்களின் பிரச்சினைகளை களைய தமிழ்நாட்டில் ஓர் அமைச்சரகம் அமைக்கப்பட்டுள்ளதையும் உலகத்தமிழர்கள் உதவிகளுக்கு அந்த அமைச்சரகத்தை பயன்படுத்திக்கொள்ளவும் அவர் கேட்டுக்கொண்டார்.

மாநாட்டில் கண்காட்சி மையம் அமைக்கப்பட்டு உலகளாவிய தமிழ்ச்சங்கங்களை அறிமுகப்படுத்தும் ஒரு முயற்சியாக இடங்கள் வழங்கப்பட்டன. நமது முத்தமிழ்ச்சங்கமும் மலேசிய எழுத்தாளர் சங்கமும் இந்த கண்காட்சி மையத்தில் கலந்துகொண்டன. மற்ற நாடுகளில் இருந்து, குறிப்பாக கிழக்காசிய நாடுகளில் இருந்தும் ஆப்பிரிக்க நாடுகளில் இருந்தும் தமிழ்ச்சங்கங்கள் இந்த கண்காட்சியில் பங்கேற்று, அவர்களது நாட்டின் பாரம்பரியம், தமிழ் பயன்பாடு குறித்தும் தகவல் பரிமாறிக்கொண்டன.


தமிழ்நாடு அயலக தமிழர் அமைச்சர் செஞ்சி மஸ்தான், உலக தமிழ்ச்சங்க தலைவர் டாக்டர் இளங்கோவனுடன் சங்க துணைத்தலைவரும் செயலாளரும்
















மாநாட்டில் பேராளர்கள்

**5. மாமல்லபுரத்தில் பொங்கல் கொண்டாட்டம்**

சென்னையில், அயலக மாநாட்டை முடித்துக் கொண்டு, மாமல்லபுரத்தின் கவுன்சிலர் பூபதி ஐயாவின் அழைப்பில் நமது சங்கப் பேராளர்கள் மாமல்லபுரத்திற்குச் சென்று பொங்கலைச் சிறப்பாக கொண்டாடினர். பல்வேறு கலை கலாச்சாரப்பே– ாட்டிகளோடு சிறந்த விருந்தோம்பலும் நடைபெற்றது.

மாமல்லபுரத்தின் எழில் கொஞ்சும் சிற்பங்களையும் சிலை வடிவங்களையும் பல்லவ நாட்டு கோவில் அமைப்புகளையும் கண்டு களிக்க வாய்ப்பு ஏற்பட்டது. நமக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கவிஞர் வரதநாசன் அவர்கள் நமக்கு வழிக– ாட்டிய மாமல்லபுரத்தின் சரித்திரத்தை சிறப்பாக விளக்கினார். இறுதியில் பூபதி ஐயா வழங்கிய சிறந்த விருந்துடன் பேராளர்கள் மீண்டும் சென்னை புறப்பட்டனர்





**6. தமிழ் நாடு கீழாம்பூர் அவர்களின் நூல் வெளியீடு**




கடந்த 4.2.24 அன்று, தமிழ் நாடு கலைமகள் இதழின் ஆசிரியர் கலைமா– மணி கீழாம்பூர் சங்கரசுப்ரமணியன் அவர்கள் மனதை தொட்ட மலேசிய ஆளுமைகள் என்ற தலைப்பில் அவரது மலேசிய நெருங்கிய நண்பர்களின் தொகுப்பாக ஒரு நூலை வெளியிட்டார். இந்த வெளியீட்டை முத்தமிழ்ச்சங்கம் பொறுப்பேற்று நடத்தியது. சிறப்பு விருந்தினராக டத்தோ பா.சகாதேவன், நேதாஜி மையத்தின் சுப.நா, மலாயா பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறைத்தலைவர் டாக்டர் ராஜேந்திரன், எஸ்பி.மணிவாசகம், தே.நி.நி.கூ.சங்கத்தின் வாரிய உறுப்பினர் தாமசேகரன் ஆகியோரும் இன்னும் பல நண்பர்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கு சங்கத்தின் செயலாளர் நிகழ்ச்சி நெறியாளராக பணியாற்றி வரவேற்புரை வழங்கினார். டத்தோ பா.சகாதேவன் தலைமையுரை வழங்கினார். சிறப்புரைகளுடன், நூல் ஆசிரியர் கீழாம்பூர் ஏற்புரையுடன், மாலை தேநீர் உபசரிப்புடன் முடிவுற்றது.














அயலகத் தமிழர் தினம் 2024


மலேசிய முத்தமிழ்ச் சங்கம்

# PERTUBUHAN MUTHAMIZH SANGAM MALAYSIA

## Statement of Accounts from 1.1.2023 till 31.12.2023

ACCOUNT NO : 32302231501

| Date | Description | Debit RM | Date | Description | Credit RM | Balance RM |
|---|---|---|---|---|---|---|
| | | | 05/07/23 | Account Opening (PBB) | 5,000.00 | |
| 11/07/2023 | Bank Charges | 7.50 | 21/07/23 | New M/Ship (23) Ordinary | 460 | 5,452.50 |
| | | | 02/08/23 | New M/Ship (1) Life | 110 | 5,562.50 |
| | | | Sept 2023 | Dinner Invitation Sales | 13,030.00 | |
| | | | | New M/ship (11) Life | 1,110.00 | 19,702.50 |
| | | | Oct 2023 | Dinner Invitation Sales | 37,480.00 | |
| 20/10/2023 | Bank Rakyat Hall Rental | 22,445.50 | | New M/Ship (3 ) Life | 330.00 | 57,512.50 |
| | Dinner Expenses | 12,000.00 | | | | |
| | Bank Charges | 1.00 | | | | 23,066.00 |
| | | | Nov 2023 | New M/Ship (12) Ordinary | 240.00 | |
| | | | | Dinner Invitation Sales | 6,760.00 | 30,066.00 |
| 28/11/2023 | Dyanas Catering | 10,000.00 | | | | |
| | Bank Statement/Charge | 18.50 | | | | 20,047.50 |
| | | | Dec 2023 | Dinner Invitation Sales | 500.00 | |
| | | | | Kementerian Sumber Manusia | 50,000.00 | 70,547.50 |
| 15/12/2023 | Printing Cost | 2,122.50 | | | | 68,425.00 |
| 18/12/2023 | Bank Charges | 0.50 | | | | 68,424.50 |
| 20/12/2023 | Dinner Expenses | 8,604.00 | | | | 59,820.50 |
| 21/12/2023 | Bank Charges | 0.50 | | | | 59.820.00 |
| 21/12/2023 | Dyanas Catering | 21,500.00 | | | | 38,320.00 |
| 22/12/2023 | Bank Charges | 0.50 | | | | 38,319.50 |
| 29/12/2023 | Indian Printer Assn. Dinner | 1,000.00 | | | | 37,319.50 |
| 30/12/2023 | Bank Charges | 0.50 | | **BALANCE IN BANK AS AT 31/12/2** | | **RM 37,319.00** |

**G.NAGESWARY**
**AUDITOR**

**S.CHANTHRALINGAM**
**TREASURER**

**B.GEETHA**
**AUDITOR**

**M.MANOGARAN**
**PRESIDENT**